வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.6063/அ5/2025, நாள் : .12.2025

பொருள் : பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் தொழில்துறை பயிற்சி மையங்கள் School (ITI) நிறுவுதல் சார்ந்து.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.077728/பிடி2/இ2/2025, நாள். .12.225.

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநருடன் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தொழில்துறை பயிற்சி மையங்கள் School (ITI) அமைப்பதற்கான செயல்முறை மற்றும் தகுதித் தணிக்கைகள் (Criteria) குறித்து ஆலோசித்து அதில் கீழ்க்கண்ட வசதிகள் கொண்ட அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் விவரம் கோரப்பட்டுள்ளது.

1. ஒவ்வொரு பள்ளியிலும் ITI -க்கு குறைந்தபட்ச நிலத் தேவையாக 0.5- ஏக்கர் (50 சென்ட்) நிலம் இருக்க வேண்டும்.
2. ஏற்கனவே கட்டப்பட்ட செய்முறை அறைகள், ஆய்வகங்கள் அல்லது பிற கட்டிடங்கள் பயன்பாடின்றி அல்லது குறைந்த பயன்பாட்டில் இருக்கும் நிலையில் இருந்தால் அத்தகைய பள்ளிகளை ITI -அமைப்பதற்கு பயன்படுத்தலாம்.
3. தொழில் பயிற்று நிலையங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள பள்ளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.
4. தொழில் மண்டலங்கள் / தொழில் சாலைகள் / தொழில் துறை பகுதிகளுக்கு அருகிலுள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன் மூலம் தொழில் தொடர்புகள் மற்றும் மாணவர்களின் வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும்.

ஆகவே மேற்காண் வசதிகள் கொண்டுள்ள அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகள் இணைப்பிலுள்ள கூகுள் படிவத்தில் உடன் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

கூகுள் படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

நகல் :

கோப்பிற்கு.

(பா.க)